**வடக்கு.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல :05/2016**

எனது இல:**NP/07/10/02/89**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
*15.06.2016*

**பிரதம செயலாளர்,**
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையில் தரம்III, தரம் IIமற்றும் தரம் Iஇல் உள்ளவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2015 (2016)**

***2014.08.15*** ஆந் திகதிய ***1875 / 39*** ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பினைத் தழுவித் தயாரிக்கப்பட்ட வடக்கு மாகாண சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின்சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி *9* மற்றும் பந்தி *14* ஆகியவற்றினது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்புக்கள்*02*, *03* மற்றும் *04*இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக மாகாண சேவையின் மோட்டார் வாகனச் சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையில் தரம்III , தரம் II மற்றும் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அவர்களினால் **2016 ஆவணி மாதம்** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*02.0* இப்பரீட்சை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களும் நகர இலக்கங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதியளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காமை அல்லது வேறு காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச் செய்து அடுத்துள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றுவதற்கான தற்றுணிபு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரைச் சார்ந்திருக்கும். விண்ணப்பதாரி விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| **நகரம்** | **நகர இலக்கம்** |
|---|---|
| யாழ்ப்பாணம் | *01* |
| வவுனியா | *03* |

*03.0* **தகைமைகள் :** குறித்த பதவிகளுக்கான சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அச்சேவையில் குறித்த வகுப்பில் நியமனமொன்றை / பதவியுயர்வினைப் பெற்றுள்ள அலுவலர்கள் மற்றும் இதுவரை இப்பரீட்சையினை பூரணப்படுத்தியிராத அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையுடையவர்களாவர்.

*04.0* விண்ணப்பமானது இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக **2016.07.08**ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:** ***393 / 48***,**கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரினைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

*05.0* **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :-** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிருபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிருபிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் ஒரு கடவுச்சீட்டு (Passport)
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யும் அதிகாரம் மேற்பார்வையாளருக்கு உண்டு.

*06.0* **விண்ணப்பங்கள் :-** இல 1 முதல் 6 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான தாளில் விண்ணப்பமானது கணினியில் தயார் செய்யப்பட்டு பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயார் செய்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் முன்னோட்டப் பிரதி என்பன அனுப்பிவைத்தலாகாது என அறிவுறுத்தப்படுகிறது. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். தரப்பட்டுள்ள பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கூடிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் கட்டாயமானதாகும்.

*07.0* **பரீட்சைக் கட்டணம்:-**

*07.1* முதன் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின் போது அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 200/-ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகம் ஒன்றில் "**செயலாளர், மாகாணபொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**" என்ற பெயருக்கு **யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தில்** மாற்றக்கூடியவாறான காசுக்கட்டளையைப் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் கழராதவாறு இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

*07.2* எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

*08.0* விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு, வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்குப் பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் அது பற்றி பின்வரும் விபரங்களுடன் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.

- கோரிக்கைக் கடிதம்,
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி,
- பணம் செலுத்திய காசுக்கட்டளையின் உறுதிப்படுத்திய பிரதி,
- விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், திகதி.
- அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கம் (Fax No),

*09.0* இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்ற அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

*10.0* பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளினது பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

***11.0 பரீட்சைத் திட்டம்***

***11.1 வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையில் தரம் IIIஇல் உள்ளவர்களுக்கு 1ம் வினைத்திறமைகாண் பரீட்சை***

***1. பாடத்திட்டம் :-***

| பாடத்துறை | பாடத்திட்டம் |
|---|---|
| தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை | 1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு.<br>2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு. |
| வாய்மொழி மூலப் பரீட்சை – கீழ்வரும் விடயங்கள் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் பரீட்சிக்கப்படும்.<br>1. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைச் செயலாற்றுகை விதிகள் தொடர்பான அறிவு.<br>2. அரச வாகனங்கள் பாவனை மற்றும் பராமரிப்புத் தொடர்பான அறிவு | தகுதிகாண் காலம், வினைத்திறன் காண் தடைப் பரீட்சை, மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறைகள், புகையிரத ஆணைச் சீட்டு, தொடர்பாடல் வழிமுறை, பொதுவான நடத்தைகள் மற்றும் ஒழுக்கம்.<br>• மோட்டார் வாகன சாரதிகளின் கடமைகளும் பொறுப்புக்களும்.<br>• அரச வாகனங்களை பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சாரதிகளின் பொறுப்புக்கள்.<br>• நாளாந்த ஓட்ட குறிப்பேடு.<br>• வாகன இருப்புக்களைப் பேணல்.<br>• வாகனங்களை திருத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்.<br>• அரச வாகனங்களில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள். |

***2. புள்ளியிடல் திட்டம் :-***

| பாடத்துறை | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| 1. தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை | *50* | *20* |
| 2. வாய்மொழி மூலப் பரீட்சை | *50* | *20* |
| மொத்தம் | ***100*** | ***40*** |

❖ வாய்மொழி, செய்முறைப் பரீட்சை இரண்டும் ஒரே தடவையில் சித்தி பெறுதல் வேண்டும்.

***11.2 வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையில் தரம் IIஇல் உள்ளவர்களுக்கு 2ம் வினைத்திறமைகாண் பரீட்சை தொடர்பில் பின்வரும் விடயங்கள் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பரீட்சிக்கப்படும்.***

***1. பாடத்திட்டம் :-***

| பாடத்துறை | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு.<br>2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | இத்துறை தொடர்பான நடைமுறை விதிகள், சட்டரீதியான மாற்றங்கள் மற்றும் அலுவலரின் திறன் அடிப்படையிலான தேர்ச்சி என்பவை மேற்படி அலுவலரின் சேவை மூப்பிற்குப் பொருந்தும் வகையில் கடந்த சேவைக்காலத்தினை விட விருத்தி அடைந்துள்ளதா என்பதனை அளவிடுதல் |

2. **புள்ளியிடல் திட்டம் :-**

| **பாடத்துறை** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைவதற்கான புள்ளிகள்** |
|---|---|---|
| தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை<br>1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு. | 50 | 20 |
| 2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 50 | 20 |
| மொத்தம் | **100** | **40** |

❖ இரண்டு தேர்ச்சிகளும் ஒரே தடவையில் சித்தி பெறுதல் வேண்டும்.

11.3 **வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையில் தரம் Iஇல் உள்ளவர்களுக்கு 3ம் வினைத்திறமைகாண் பரீட்சை தொடர்பில் பின்வரும் விடயங்கள் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பரீட்சிக்கப்படும்.**

1. **பாடத்திட்டம் :-**

| **பாடத்துறை** | **பாடத்திட்டம்** |
|---|---|
| 1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு.<br><br>2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | நெடுஞ்சாலைகள் சட்டவிதிகள் மற்றும் மோட்டார் பொறிமுறைவிஞ்ஞானம் தொடர்பான அறிவிற்கு புறம்பாக அலுவலரின் திறன்அடிப்படையிலான தேர்ச்சி என்பன மேற்படி அலுவலரின் சேவைமூப்பிற்குப் பொருந்தும் வகையில் விருத்தி அடைந்துள்ளதா என்பதனையும் மற்றும் அலுவலர் பணிபுரியும் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் பணிகள் தொடர்பாக போதிய அறிவினைப் பெற்றுக் கொண்டுள்ளாரா என்பதனையும் அளவிடுதல் மேற்கொள்ளப்படும் |

2. **புள்ளியிடல் திட்டம் :-**

| **பாடத்துறை** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைவதற்கான புள்ளிகள்** |
|---|---|---|
| தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை<br>1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு. | 50 | 20 |
| 2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 50 | 20 |
| மொத்தம் | **100** | **40** |

❖ இரண்டு தேர்ச்சிகளும் ஒரே தடவையில் சித்தி பெறுதல் வேண்டும்.

12.0 இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின் / திணைக்களங்களின் /அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இத்தகவல்களை வடமாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-** இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் என்பதுடன் தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழியே மேலோங்குதல் வேண்டும்.

**ரூ.வரதலிங்கம்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.

*மாதிரி விண்ணப்பபடிவம்*

**வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையில் தரம்III, தரம் IIமற்றும் தரம் I இல் உள்ளவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2015 /2016**

| |
|---|
| |

***(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)***

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - S
தமிழ் - T
(ஏற்புடையஎழுத்தை கூட்டினுள் எழுதவும்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(அறிவித்தலின் 2வது பந்தியில் குறிப்பிட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும்)

1.

1.1 முதலெழுத்துகளுடன் பெயர் : …………………………………………………………………………………………
(ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) உதா Mr. AATHVIK. A

1.2 முதலெழுத்துகளுடன் பெயர் : …………………………………………………………………………………………..
(சிங்களத்தில் / தமிழில்).

1.3 முழுப் பெயர் :…………………………………………………………………………………………….
(ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்)

1.4 முழுப் பெயர் :………………………………………………………………………………………......
(சிங்களத்தில் / தமிழில்)

2. சேவையாற்றும் இடமும் முகவரியும் :- (இம்முகவரிக்கே அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்)

2.1 : ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில் :

…………………………………………………………………………………………………………………….

…………………………………………………………………………………………………………………….

…………………………………………………………………………………………………………………….

2.2: தமிழில் / சிங்களத்தில்:

…………………………………………………………………………………………………………………….

…………………………………………………………………………………………………………………….

…………………………………………………………………………………………………………………….

2.3 தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. பால் (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
(பெண் - 1 ஆண் - 0)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் (உரிய தரத்திற்கு எதிரே புள்ளடியிடவும்)

| **இல** | **தரம்** | **தோற்றவுள்ள பரீட்சை** |
|---|---|---|
| *01* | தரம் III | |
| *02* | தரம் II | |
| *03* | தரம் I | |

6. தற்போது வகிக்கும் பதவி

6.1 பதவியும் வகுப்பும் : ……………………………………………………………………………

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :- ………………………………………………………………

6.3 நியமனம் பெற்ற திகதி :………………………………………………………………............

7.

7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? ………………………………………..……..
(பந்தி 7.1 ற்குரிய விபரம் ''இல்லை'' எனின்)

7.2 பணம் செலுத்தியதற்கான காசுக் கட்டளையின் இலக்கம்.: ……………………………………………...

7.3 காசுக்கட்டளை பெற்றுக் கொண்ட அஞ்சல் அலுவலகம் : ……………………………..………………..

| காசுக் கட்டளையை இங்கு கழராதவாறு ஒட்டவும் |
|---|

8. **பரீட்சார்த்தியின் உறுதியுரை:**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் தமிழ்/சிங்கள மொழி மூலமாக பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், நான் பரீட்சைக்கு …….. தடவையாகத் தோற்றுகின்றேன் என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தத்தேவையில்லை என்றும் / பரீட்சைக் கட்டணம் ரூபா ………… பெறுமதியான பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட…………………………….……அஞ்சல் அலுவலகத்தின் ...................…….......ஆம் இலக்க ....…..................... ஆந் திகதிய காசுக்கட்டளை இதில் இணைக்கப்பட்டுள்ளது என்றும் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சை தொடர்பில் செயலாளர், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அவர்களினால் எடுக்கப்படும் சகல தீர்மானங்களுக்கும், பரீட்சைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

திகதி: …………………………                                    .........................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்

**குறிப்பு :** பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

9. **கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:**

திரு/திருமதி/செல்வி …………………………………………….. எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ………………………………… ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அவர் முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் / உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அக் காசுக்கட்டளை ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

……………………………………………..
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

பெயர் : ………………………………………
பதவிப் பெயர் : ………………………………………
முகவரி : ……………………………………….
திகதி : ………………………………………

10.**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும்,
2. அவர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,
3. அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார் / தோற்றவில்லை என்றும்,
4. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய காசுக்கட்டளை இவ்விண்ணப்பப் படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,
5. அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும், இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

………………….…………………
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்

பெயர் : ……………………………….………...
பதவிப் பெயர் : ……………………………….………...
முகவரி : ……………………………….………...
திகதி : ……………………………….………...

**குறிப்பு :- தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.**